

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (28.07.2024) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். உடன் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் .டி.எம்.செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி ஆக்ரிதி சேத்தி, சேலம் மேல் காவிரி வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் திரு.ராமலிங்கம், தஞ்சாவூர் கீழ்க்காவிரி வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் சண்முகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

# மேட்டூர் அணையில் 12 ஆயிரம் கன அடி நீர் திறப்பு!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சேலம், ஜூலை 30 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (28.07.2024) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

காவிரி நதிநீர் ஆணையம் ஏற்கனவே தமிழ்நாட்டிற்கு 45 டிஎம்சி தண்ணீர் திறக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் கர்நாடக மாநிலத்தால் நீர் திறக்கப்படவில்லை. எனவே முதலமைச்சர் அவர்கள் நீரை திறந்து விடுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

தற்போது காவிரி நீர் பிடிப்புப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் மேட்டூர் அணைக்கு சுமார் 1,55,000 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இன்று (28-7-2024) காலை 10 மணி நிலவரப்படி மேட்டூர் அணை சுமார் 108 அடியை எட்டியது.

### கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்!

அதனைத்தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மேட்டூர் அணையில் இருந்து நீரை திறந்து விடுவது குறித்து நீர்வளத்துறை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இதனடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்றையதினம் மேட்டூர் அணையில் இருந்து 12,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே காவிரி கரையோரத்தில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இந்நீரைக் கொண்டு அருகில் உள்ள ஏரிகள் மற்றும் டெல்டா பகுதிகளில் உள்ள அனைத்து ஏரிகளும் நிரப்பப்படும்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. ராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. பெ.மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி)செல்வி ஆக்ரிதி சேத்தி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி.ரேவதி ராஜசேகர், சேலம் மேல் காவிரி வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் ராமலிங்கம், தஞ்சாவூர் கீழ்க்கா வேரி வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் சண்முகம், மேட்டூர் நகரமன்றத் தலைவர் திருமதி.சந்திரா, சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி ந. லோகநாயகி, மேட்டூர் அணை கோட்ட செயற்பொறியாளர் சிவகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கொத்தமங்கலம் கிராமத்தில், மாநிலங்களவை உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை, மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா தலைமையில் 28.07.2024 அன்று திறந்து வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) (அறந்தாங்கி) மரு.நமச்சிவாயம், திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### மாணவ - மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு

# கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, ஜூலை 30-

புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 23.07.2024 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் LDI10001 623 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது.



அதன்படி இன்றைய தினம், புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளியில், 472 மாணவிகளுக்கு 5.22,46,720 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 202324 ஆம் கல்வியாண்டில் 17,428 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று நடப்பு 202425 ஆம் கல்வியாண்டில் 14,718 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட உள்ளது.

மேலும் மாணவிக்கான ஒரு விலையில்லா மிதிவண்டி ரூ.4.760 மதிப்பிலும் மற்றும் மாணவருக்கான ஒரு விலையில்லா மிதிவண்டி ரூ.4,900 மதிப்பிலும் அடங்கும். இதன் மூலம் மாணவ, மாணவிகள் பள்ளிக்கு நாள்தோறும் விரைவாக சரியான நேரத்தில் சென்று வர இயலும். மேலும் நாள்தோறும் மிதிவண்டியினை பயன்படுத்துவதன் மூலம் சிறந்த உடற்பயிற்சியாகவும் மாணவ, மாணவிகளுக்கு விளங்கும். எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் கல்வி சார்ந்த திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு கல்வியில் சிறந்து விளங்கி, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) கூ.சண்முகம், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன். மாவட்டச் சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் மெ.சி.சாலைசெந்தில், முன்னாள் முதன்மைக் கல்வி அலுவலர் சாமி சத்தியமூர்த்தி, வட்டாட்சியர் பரணி, பள்ளி தலைமையாசிரியர் ஆர்.தமிழரசி, பள்ளித்துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குருமாரிமுத்து மற்றும் அ.ரெத்தினம், ரவீஸ் ரவி, செய்யது முகம்மது, இதயம் அப்துல்லா, விஜயக்குமார், மு.ராஜதுரை, பால்ராஜ், எல்.ஐ.சி ரமேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுச்சேரி தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## இரா.சிவா எம்.எல்.ஏ. தலைமையில்!

புதுச்சேரி, ஜூலை 30-

ஒன்றிய பட்ஜெட்டில் புதுச்சேரிக்கு நிதி ஒதுக்காமல் புதுச்சேரி மக்களை வஞ்சித்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் அண்ணா சிலை அருகில் நேற்று காலை நடந்தது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமை தாங்கி கண்டன உரையாற்றினார்.

மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான பூ. மூர்த்தி வரவேற்று பேசினார்.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், முன்னாள் துணைவேந்தருமான முனைவர் சபாபதி மோகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஒன்றிய பட்ஜெட்டில் புதுச்சேரி மாநிலம் புறக்கணிக்கப்பட்டதை கண்டிக்கின்ற வகையில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே.குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே.கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப.செல்வநாதன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ.வேலவன், வீ. சண்முகம், எஸ்.தர்மராஜன், ஆர். ரவீந்திரன், டி.செந்தில் வேலன், ப.இளம்பரிதி, பெ. பழநி, மு.பிரபாகரன், எஸ். எஸ்.செந்தில்குமார், நா.கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ்,

தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல்.மணிகண்டன், து.சக்திவேல், கோ. தியாகராஜன், ர.சிவக்குமார், ரா.ஆறுமுகம், ப.வடிவேல், ஜெ.மோகன், பி.ஆர்.ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழிய பாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே.ராதாகிருஷ்ணன், ம.கலைவாணன்,

அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், தொ.மு.ச. அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச.பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) வீரய்யன், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழரசன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு.ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந.கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி.ஆறுமுகம், பொறியாளர் அணி ஆ.அருண்குமார், நெசவாளர் அணி ந.செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந.ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம.மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, மகளிர் தொண்டர் அணி சுமதி, அணித் தலைவர்கள் வழக்கறிஞர் அணி ச.லோககணேசன், மகளிர் அணி ரா.சந்திரகலா, ஆதிதிராவிட நலக்குழு மு.பழனிசாமி, மீனவர் அணி பா.தில்லையப்பன் (எ) ரமேஷ், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை புலவர் பா.கிருஷ்ணமூர்த்தி, பொறியாளர் அணி எஸ்.பி. பூபாலன், வர்த்தகர் அணி க.செல்வமுத்து குமார விநாயகம், சுற்றுச்சூழல் அணி அரங்க பன்னீர்செல்வம், அயலக அணி மு.முகஹம்மது தாஹா, அமைப்புசாரா ஓட்டுநர் அணி எஸ். எம்.எஸ். ஸ்ரீதர், தொமுச பொ. அங்காளன் மற்றும் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

### தென்றல் செல்வராஜ் நிகழ்ச்சி ஏற்பாடு! என்.கௌதமன் தலைமை!

# பொள்ளாச்சியில் கலைஞர் நூற்றாண்டு விழா பட்டிமன்றம்!

## அமைச்சர் சு.முத்துசாமி - தளபதி முருகேசன் - முன்னணியினர் சிறப்புரை!

பொள்ளாச்சி, ஜூலை 30 -

கழக சட்ட திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில், கழக சட்ட திட்டத் திருத்தக் குழு நடத்தும் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி மற்றும் விக்கிர வாண்டி இடைத் தேர்தல் வெற்றி விழாக் களை முன்னிட்டு மாபெரும் இன்னிசை பாட்டு மன்றம் மற்றும் பட்டிமன்ற நிகழ்ச்சி இன்று (30.7.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு லாரி உரிமையாளர்கள் திருமண மண்டபம், பொள்ளாச்சியில் நடைபெறுகின்றது.

கலைஞரின் நிலைத்த புகழ்க்கு பெரிதும் காரணம் எழுதுகோலே என்ற தலைப்பில் வேலூர் திமிரி சதாசிவம், காரைக்கால் யோகலட்சுமியும், செங்கோலே என்ற தலைப்பில் திருச்சி கல்பனா தர்மேந்தர், பவானி பாலு ஆகியோர் வாதிடுகின்றனர்.

நடுவராக பேராசிரியர் கோ.பழனி பொறுப்பேற்றுள்ளார். விழாவிற்கு நகராட்சி துணைத் தலைவர் எஸ்.கௌதமன் தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

பி.ஏ.செந்தில்குமார், மா.ஜெயசந்திரன், ஞானவேல், சி.எஸ்.கருப்பையா, தனம் தங்கதுரை, பைக் பாபு, அவினாஷ், கார்த்தி, அரவிந்த், வசந்தராம், எம். வி.ஜெயக்குமார், டைகர் மணிகண்டன், லிங்கதுரை, ர.ஜெகதீஸ்குமார், சரவணகுமார், சபாரிசாகுல், பிரவின்குமார், சபரி, மலர் பாலு, வடுகை அருண், ஹரிபிரபு, அபுதாகீர், நவீன், மகேந்திரன், கௌதம், ரகுராஜா, தினேஷ், தாஸ்பிரபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மு. கண்ணப்பன், ஈஸ்வரசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் கு.சண்முக சுந்தரம், டாக்டர்ஆர்.மகேந்திரன், இரா.நவநீதகிருஷ்ணன், எம்.கமுதபாரதி, மு.க. முத்து, இரா.தமிழ்மணி, மருத்துவர் கி.வரதராஜன், திப்பம்பட்டி ஆறுசாமி, கே.எம்.நாகராஜன், ஜி.ஏ. அதிபதி, பனப்பட்டிதினகரன், பொள்ளாச்சி சித்திக், வி.பி.சந்திரசேகர், மா.சண்முகசுந்தரம், மயூராசுப்பிரமணி,ஜெயபிரகாஷ், சியாமளா நவநீத கிருஷ்ணன், கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், கோ.பால கிருஷ்ணன், எஸ்.ஜெயக்குமார், அ.முத்துசாமி, மாணிக்கராஜ், திருமலை ராஜா, கே.வி.ஆறுமுகம், கே.பி. மணிகண்டன், கமலக்கண்ணன், பூவை செல்வராஜ், கரியப்பட்டி செல்வராஜ், அங்குராஜ், மார்க்கெட் ரவி உள்பட மாவட்ட, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், கழக முன்னணித் தோழர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

விக்னேஷ் பிரபு நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கழக சட்ட திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் செய்துள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, நீலகிரி மாவட்டம், கீழ் கோத்தகிரி ஒன்றியத்துக்கு உட்பட்ட கொடநாடு, கெரடாமட்டம், ஈளடா ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பலழத்த காற்றினால் சேதமடைந்த வீடுகள் மற்றும் மரங்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் பணிகளால் ஈர்க்கப்பட்டு, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முன்னிலையில், கோலியனூர் மேற்கு ஒன்றியம் எடப்பாளையத்தைச் சேர்ந்த பா.ஜ.க. மாவட்டப் பொருளாதாரப் பிரிவு செயலாளர் குமார், அ.தி.மு.க. கிளை துணைச் செயலாளர் வெங்கடகிருஷ்ணன், அ.தி.மு.க. கிளைப் பொருளாளர் ஏழுமலை ஆகியோர் தலைமையில் 100க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், ஒன்றியக் குழுத் தலைவர் சச்சிதானந்தம், கிளைச் செயலாளர் நாரயணராவ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.